10th March 1966]

விஞ்ஞான பாட போதனை முறை

* 241 கேள்வி—திரு. செ. மாதவன் :
திரு. எஸ். ஜே. ராமசாமி : } கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் விஞ்ஞான பாடபோதனை முறையையும், பாட திட்டங்களையும் மாற்றி அமைக்கும் திட்டம் உண்டா ?

(இ) அதன் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The revision of syllabus for Standards I to XI has been under consideration of the Government. The revised syllabi for Standards I to IX have been published. It has been decided to introduce one Elective in the syllabus for Standards X and XI. Elementary Science is included in the Core subjects. One Elective may be chosen either from the Science subjects or from Humanities. The Universities are concerned with the revision of syllabus and the pattern of teaching in colleges.

திரு. செ. மாதவன் : நம்முடைய நாட்டில் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் விஞ்ஞான பாட போதனை சரியான முறையில் நடைபெறவில்லை என்று மேல் நாட்டுக் கல்லூரி நிபுணர்கள் கூறிய கருத்து நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ? நமது முதல் அமைச்சர் அவர்களும் விஞ்ஞான பாடத்தை அடிப்படையிலேயே போதிக்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கு மேல் நாட்டுக் கல்வி நிபுணர்களின் கருத்தை நாம் எதிர்பார்க்க வேண்டியதில்லை. நமக்கே இது தெரியவருகிறது. இன்னும் விஞ்ஞான பாட போதனையின் தரமும், மற்றப் பாடங்களின் தரமும் உயர்த்தப்படவேண்டும் என்பதுதான் கருத்து. இது எந்த நாட்டிலும் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இங்கிலாந்தை எடுத்துக் கொண்டாலும் சரி, ரஷ்யாவை எடுத்துக்கொண்டாலும் சரி, அமெரிக்காவை எடுத்துக்கொண்டாலும் சரி, இருப்பது போதாது மேலும் ஆராய்ச்சி புரியவேண்டும், கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும் என்றுதான் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. நாமும் அதிகமான கவனம் செலுத்திவருகிறோம். விஞ்ஞானக் கல்வியை ஆரம்ப கல்வி கட்டத்திலிருந்தே புகட்ட வேண்டும் என்ற கருத்தை நான் கூறியதாகத் தெரிவித்தார்கள். ஆரம்பக் கல்வி கட்டத்தில், உயர்நிலைப் பள்ளியில், சர்வகலாசாலைகளில் கல்லூரிகளில் இவற்றிலெல்லாம் எவ்வாறு விஞ்ஞான அறிவை உயர்த்துவது, எவ்வாறு பாடத் திட்டத்தை மாற்றி அல்லது திருத்தி அமைப்பது என்பதிலெல்லாம் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

[10th March 1966

திரு. வை. சங்கரன் : கல்லூரிகளில் ஹியுமானிடிஸ் Optional ஆக இருக்கிறது. ஆனால் அதற்கு மாணவர்கள் வருவதில்லை. இப்பொழுது 10-வது வகுப்பில் 'ஹ்யூமானிடீஸ்' 'எலக்டிவ்' சப்ஜெக்டாக வைக்கப்பட்டிருக்கிறது. இதற்குத் தகுந்த அளவு மாணவர்கள் வருவதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள சர்க்கார் உத்தேசித்திருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது சிலபஸ் நிர்ணயிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னேன். சிலபஸ் நிர்ணயிக்கப்பட்ட பிறகு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ம. கமலநாதன் : சமூக பாடத்தை எடுத்துவிட்டு, முன்பு போல விஞ்ஞான பாடம் விருப்பப் பாடமாக கட்டாயமாக்கப்படும் என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது சிலபஸ் திருத்தி அமைக்கப்பட்டு வருகிறது. அந்த வகையிலே பாடத் திட்டங்கள் திருத்தி அமைக்கப்படும்.

திரு. செ. மாதவன் : இப்பொழுதுள்ள பாடத் திட்டம் தேர்வுக்கு என்று விஞ்ஞான பாடத்தைப் படிக்கக்கூடிய முறையில் அமைந்திருக்கிறது. விஞ்ஞான ஆராய்ச்சி மனப்பான்மை ஏற்படக்கூடிய அளவுக்கு இந்தப் பாடத் திட்டம் மாற்றி அமைக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தொடக்கத்திலே ஆராய்ச்சி செய்வது என்ற வகையிலே அல்ல. ஆனால், ஆராய்ச்சி மனப்பான்மை மாணவர்களுக்கு அந்தக் கட்டத்திலேயே வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். எலிமெண்டரி ஸ்டேஜஸில், அதாவது, முதலில் எவ்வளவு தூரம் மாணவர்களுக்கு விஞ்ஞானத்தில் ருசி ஏற்படுத்தி, அடிப்படையிலே அவர்கள் விஞ்ஞான அறிவு பெறச்செய்வது என்பதைப் பற்றித் தான் இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

MR. SPEAKER : Now we will take up questions relating to the Hon. Minister for Public Health.

Orthopaedic Centres in the State

* 231 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether there is any proposal before the Government to open orthopaedic centres in the State for the treatment of patients having squint; and

(*b*) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.